ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

ஆன்மவஸ்து நித்தியசுத்தமென்று சாஸ்திரம் கூறுகின்றது. ஆயினும் தேஹேந்திரியாதிகளோடு கலந்தபோது அந்த ஆத்துமவஸ்துவின் இடத்தில் அசுத்தியை அஞ்ஞானிகள் கற்பிக்கின்றனர். அவர்களது பிரமத்தையும் அனுசரித்து அந்த அசுத்தி விலக சில ஸாதனங்களை சாஸ்திரம் விதித்திருக்கிறது. அசுத்த மனிதர்களின் ஸம்பந்தம் நேர்ந்தாலும் அசுத்த வஸ்துக்களின் ஸ்பர்சமேற்பட்டாலும் அசுத்தியுண்டாகும். அந்த ஸ்பர்சமும் ஸம்பந்தமும் பலவாறாக ஸம்பவிக்குமாகையால், ஆசமனம், ஸூரிய மண்டல தரிசனம், கிருதப் பிராசனம் (நெய் சாப்பிடுதல்) பிராணாயாமம், சிலமந்திரஜபம், ஸ்நானம், ஸசேலஸ்நானம் முதலிய பலவகைப்பட்ட சுத்தி ஸாதனங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஜனனமரணாதி காலங்களில் அசுத்தி சாஸ்திரங்களில் கூறப்படுகின்றது. சில ஆசௌசம் ஸ்நானத்தால் மாத்திரம் விலகிவிடும். சில காலத்தால் மாத்திரம் விலகும். சில காலம் ஸ்நானம் இரண்டுகளாலும் விலகும். அந்தக் காலமென்பதும் 3-நாள், 10-நாள் முதலியதாகும். ஜாதிபேதத்திற்குத் தக்கபடியும் காலபேதம் உண்டு. அவ்விதம் சாஸ்திரத்தில் விதிக்கப்படுவதற்குக் காரணம் ஹர்ஷமும், (ஸந்தோஷமும்) விஷாதமும் (துக்கமும்) ஆகும். ஸந்தோஷ காரணங்களுள் புத்திரோத்பத்தி பெரிதாகக் கூறப்படுகின்றது. அதனால் புத்திராதி ஜனனத்தில் ஆசௌசம் விதிக்கப்படுகிறது. துக்க காரணங்களுள் தாய்தந்தை முதலிய பெரியாரை விட்டுப்பிரிவது மிகப்பெரிதாகும். அதனாற்றான் அவர்கள் மரித்த காலத்தில் ஆசௌசம் விதிக்கப்படுகிறது. இதுபோல் அற்பகார்யங்களிலும் சிலர் ஹர்ஷவிஷாதங்களை அனுபவிக்கின்றனரே. அப்பொழுது அவர்களை ஆசௌசிகளென்று சொல்லக் காணோமேயென்றால் வாஸ்தவம்தான். அப்படி ஹர்ஷவிஷாதப்படுவது சாஸ்திரங்களில் பலவிடங்களில் நிஷேதிக்கப்படுவதால் அது தகாதகார்யமென்றே தெரிகிறது. அதனாற்றான் பகவத்கீதையில் ஸ்ரீபகவான் ஹர்ஷவிஷாதங்களை அடையக்கூடாதென்று அனேகந்தடவை வற்புறுத்திக் கூறுகின்றார். அந்த ஆசௌச காலத்தில் ஸந்தியாவந்தனம் முதலிய அவஸ்ய கர்மந்தவிர வேறுதர்மானுஷ்டானம் நிஷேதிக்கப்படுகிறது. அந்த ஆசௌசிகளை மற்றவர் ஸ்பர்சிக்கக்கூடாது. சில ஆசௌசிகளைப் பார்க்கவும் கூடாது. இந்த ஆசாரம் ஸநாதன தர்மிகளிடத்தில் இப்பொழுதும் இருக்கின்றது. நிமித்தவசத்தால் சில காலவிசேஷத்தில் உண்டாகி விலகக்கூடிய ஆசௌசம்போல் சில ஜாதியாருக்கு அசுத்தி எப்பொழுதுமே இருப்பதாக சாஸ்திரம் ஸ்பஷ்டமாகக் கூறுகின்றது. அதுவும் அனுஷ்டானத்தில் இருந்துவருகின்றது. அது சிலருக்கு ஸஹிக்க முடியாததாகத் தோன்றியபோதிலும் சாஸ்திரத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள் அதன்படி அனுஷ்டித்து நித்தியசுத்தமான தன் நிஜ ஸ்வரூபத்தையடைவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

ஸ்ரீ

௨

# ஆர்ய தர்மம்.

பிரமோத-௵ வைகாசி-மீ ௯௨

## ப்ரம்மசாரிக்கு ஆசௌசமுண்டா?

ப்ரம்மசாரியென்ற ஆசிரமிகள் சிலர் ஞாதிகளின் ஜனன மரணாசௌசங்களைக்கொள்ளுகின்றார்கள், சிலர் கொள்ளுவதில்லை. அதனால் சிலருக்கு ஸம்சயமுண்டாகின்றது. ப்ரம்மசாரிகளெல்லோருக்கும் ஆசௌசாதியனுஷ்டானம் ஒரேவிதமாகத்தானே இருக்கவேண்டும்? சிலர் அனுஷ்டிக்கவும் சிலர் அனுஷ்டிக்காமலிருக்கவும் என்ன காரணம்? ப்ரம்மசர்யாச்ரமத்தில் விருதானுஷ்டானநியமமிருப்பதனால் ஞாதிஜனனமரணாசௌசமில்லையென்றால் அது எல்லோருக்கும் ஸமந்தானே. அப்படியிருக்க சிலர் அனுஷ்டிப்பானேன? ஆனால் இப்பொழுது ப்ரம்மசாரிகள் யாருமே ஒரு விரதத்தையும் அனுஷ்டிக்கக்காணோம். குருகுலத்தில் வஸிக்கக் காணோம். நியமாத்தியயனம் செய்யக்காணோம். அதனால் அவர்களுக்கு ஆசௌசம் உண்டென்றால் அப்பொழுது எல்லா ப்ரம்மசாரிகளும் அனுஷ்டிக்கவேண்டியதுதானே? சில வகுப்பு ப்ரம்மசாரிகள் அனுஷ்டிக்காமலிருப்பானேன் என்று ஸம்சயப்படுகிறார்கள். இந்த விஷயம் அவசியம் விசாரிக்கவேண்டியதுதான். இது போலவே மற்ற ஆசிரமிகளிடத்தில் சில ஆசாரபேதங் காணப்படுவதும் விசாரிக்கவேண்டியதுதான். சிலர் ஸம்சயத்தைமாத்திரம் கேட்கிறார்கள். அந்த ஸம்சயநிவர்த்திக்காக அனேகம்பேர்கள் சேர்ந்து தீர்மானிக்கப்பட்டதை எல்லோரும் ஒரே அபிப்பிராயமாக அங்கீகரித்து அனுஷ்டானத்தில் கொண்டுவருவதில்லை. உதாரணமாக கர்மானுஷ்டானத்திற்கு முக்கியாங்கமாயுள்ள திதிநக்ஷத்திராதிகளைக் குறிக்கும் பஞ்சாங்கம் நம் நாட்டில் ,எவ்வளவு பேதப்பட்டு காணப்படுகின்றது பாருங்கள். ஆனால் இதைப்பற்றி எவ்வளவோ ஸபைகளில் எவ்வளவோ விசாரம் நடந்திருந்தும் சிலவிடத்தில் ஒருநிச்சயித்திற்கொண்டுவராமல்விட்டுவிட்டார்கள்.

நிச்சயமானவிடத்தில் எப்படிநிச்சயித்தார்களோ அப்படி எல்லோரும் அனுஷ்டித்து வரவில்லை. அவரவர்களுக்குத் தோன்றிய படியே நடத்திவருகிறார்கள். உபாகர்ம விஷயத்தில் ஒவ்வொரு வருஷத்திலும் விசாரம் செய்வதில் குறைவில்லை. எல்லாக் கிராமங்களிலும் ஒரே மாதிரி அனுஷ்டானம் வந்தது என்று சொல்லவும் முடியவில்லை. இதுபோலவே பல விஷயங்கள் ஸம்சயப்பட்டு விசாரம் செய்து தீர்மானிக்கும்படி ஸபைகளில் கொண்டுவரப்பட்டாலும் சிலவிடத்தில் ஸபையோர் அதைக் கவனிப்பதே இல்லை. இவ்வாறு நம் ஆர்யதர்மம் அனுஷ்டானத்தில் ஒரு பிரகாரமாய் இல்லாமல் பலவிதமாக இருக்கின்றது. ஆனல் சில விஷயங்களில் விகல்பம் சாஸ்திரத்திலேயே கூறப்படுவதால் எல்லா விஷயங்களிலும் இப்படியே விகல்பமாய் அனுஷ்டிக்கப்படட்டுமேயென்று பண்டிதர்களும் உபேக்ஷையாயிருந்ததிலிருந்து அனேக விஷயங்கள் சாஸ்திரங்களில் ஒரே விதமாகக் கூறப்பட்டிருந்தபோதிலும் பலவிதமாக அனுஷ்டானத்தில் கொண்டுவரப்பட்டு விட்டன. பிறகு அவைகளை விசாரத்திற்குக் கொண்டுவந்தால் அப்பொழுது ஆசாரத்தை அனுசரிப்பதா சாஸ்திரத்தை அனுசரிப்பதா என்று தீராததோர் ஸம்சயம் வந்துவிடுகிறது. அப்பொழுது ஏகமனதாய் எல்லோரும் விசாரிக்கப் பிரயத்னப்படுவதில்லை. பிரயத்னப்பட்டாலும் அதன்படி நிச்சயிக்கப்படுவதில்லை. நிச்சயிக்கப்பட்டாலும் ஒரே பிரகாரமாக அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதில்லை. "பாம்புக்கு மூப்பில்லை" என்ற பழமொழியைத் தர்ம விஷயத்தில் எல்லோரும் ஆதரிக்கிறார்கள். அப்படியில்லாமல் பிரகிருதவிஷயத்தையும் பண்டிதர்கள் விமர்சம் செய்து தீர்மானித்து இவ்விஷயத்தில் சாஸ்திரத்திலேயே விகல்பமாகக் கூறப்பட்டிருப்பதாக ஏற்பட்டால் அப்படியாவது ஒரேவிதமாகக்கூறப்பட்டிருந்தால் ஒரேவிதமாயாவது அனுஷ்டானத்தில் கொண்டுவந்து ஸகல சிரேயஸ்ஸையும் அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

# ஸ்ரீ சத்திரபதி சிவாஜி மஹாராஜா.

कलिकल्मषहारीणि हारीणिजन चेतसाम् ।
यशांसि शिवराजस्य श्रोतव्यानि मनीषिभिः ॥

शिवभारतम्—कवीन्द्रपरमानन्दः

"அறிஞர்கள் கலியின்கொடுமையை நீக்க வல்லதும் மனிதர்களின் மனத்தைக் கவருவதுமான 'சிவாஜி' மன்னனின் சரித்தைக் கேழ்க்கவேண்டும்.'

என்னாளும் எந்நாட்டோராலும் என்னாட்டினும் நன்னாடு என்று கருதப்படும் நம் நாட்டை பல ஆர்யமன்னர்களும் தன்னறஞ் சிறிதும் வழுவாது முன்னம் செவ்வனே காப்பாற்றி வந்தனர் என்பதை நம் புராணங்கள் வாயிலாகவும் மற்றும் பல நூல்களின் வாயிலாகவும் அறிகிறோம். கலியின் கோலாஹலங்கள் நிறைந்த பிற்காலத்தில் நம்மையும் நம்மதத்தையும் பிறமதஸ்தர்களிடமிருந்து காப்பாற்றி நிலைபெறச்செய்த மஹான் இவரே.

சுமார் சற்றேறக்குறைய 270 வருஷங்களுக்கு முன் 'ஹஸ்தினாபுரம் விஜயபுரம்' முதலிய தலை நகரங்களை தன் வசமாக்கிக்கொண்டு மஹம்மதிய மன்னர்கள் அரசுசெலுத்தத் தலைப்பட்டனர். அந்தோ! அக்காலத்தில் அந்தணர்களின் நிலை எவ்வாறு இருந்திருக்கும் என்று மனதினாலும் நினைக்கவியலாது. மன்னர்களினாணைக்கிணங்கி பல மஹம்மதியர்களும் ஓர் கையில் குரானையும் (மஹம்மதியவேதம்)ஓர்கையில் கத்தியையும் கொண்டுசென்று "கத்தி வேண்டுமா? குரான் வேண்டுமா?" என ஒவ்வொரு கிராமத்திலும் ஜனங்களைக் கேழ்ப்பார். அதாவது மஹம்மதிய மதத்திற்சேர்ந்து அம்மதாசாரணையைக் கைக்கொள்கிறாயா? அல்லது இக்கத்திக்கு இறையாகிறாயா? என்பது அதன் பொருள்.

அக்காலத்துத் தன் கண்ணெதிரே தம் மதமழிவதைக்காண்பதினும் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்வது மேல் எனக் கருதி தங்களுடையவும் தங்கள் பெண்பிள்ளைகளுடையயும் உயிர்களை நீக்கினோர் எத்துணைபெயர்கள் என்பது எண்ணிலடங்காது. புராதன மன்னர்களாலாதரிக்கப்பட்ட நம் தேவாலயங்களிலிருந்த

நல்ல பல விக்கிரஹங்களும், தங்கப்பாத்திரங்களும் வெள்ளிப் பாத்திரங்களும் இம்மஹம்மதியர்களால் சூரையாடப்பட்டன. பல ரஹங்கள் பின்னம் செய்யப்பட்டு மசூதிவாயிலில் ஏறும்படிக் கட்டுகளாகச் செய்யப்பட்டன. அவர்களிடமிருந்து காப்பாற்றுவதன் நிமித்தம் நம் முன்னோர்களால் பல விக்கிரஹங்கள் முதலியன கிணறுகளிலும் குளங்களிலும் பூகிருஹங்களிலும் போட்டு வைக்கப்பட்டன.

அக்காலத்தில் கல்வியில் தேர்ச்சிபெற்ற கவிகல்யாண மல்லன், பண்டித ஜகன்னாதன், பரிமள காளிதாஸன் முதலிய பல பண்டிதர், லாடகான், ஷாஜஹான் அக்பர் முதலிய மகம்மதிய மன்னர்களை வசப்படுத்திக்கொண்டும் அவர்களுடைய ஆஸ்தானங்களிலேயே வித்வான்களாகவிளங்கிக்கொண்டும், அவ்வரசர்களுக்கு ஆர்யர்களிடம் தயையுண்டாகுமாறு புத்திபுகட்டி, நம்மையும் நம் மதத்தையும்காப்பாற்றிவந்தனர். அவ்வரசர்கள்மனங்களிக்குமாறு பல கிரந்தங்களை இயற்றினர். ஓர் கவி 'பூபரிக்கிரமணம்' என்ற நூலில் பல பார்ஸிச் சொற்களைக் கலந்தெழுதியிருக்கின்றார். மற்றும் யாரோ ஒருவர் தன்னுயிருக்குஅஞ்சி மஹம்மதிய மன்னரை திருப்தியறச் செய்யக்கருதி 'அல்லோபநிஷத்' என ஓர் கிரந்தம் எழுதியுள்ளார். அந்தோ! கஷ்டம்!! என்ன செய்வார்கள். இருப்பினும் நல்ல ஸர்ப்பத்துடன் பழகுவது எளிதா?

இங்கோர் நிகழ்ந்த செய்தியை வரையாது நிற்க மனம் வரவில்லை. ஔரங்கஸீப்பு என்னும் மஹம்மதிய மன்னர் ஓர் தினம் ஊர் சுற்றிவருகையில் ஓர் சிறிய வீட்டின் திண்ணையில் மறையோனொருவன்இராமாயணம்ஸப்தகாண்டங்களுமடங்கியதோர்பெரிய ஓலைச்சுவடியை இராகத்துடன் படிப்பதைக்கண்டான். உடனே அரசன் அவரைக் கூப்பிட்டு அஃதென்னவென வினவினன்அதற்கப் பிராமணர் 'இஃது ஆர்யமன்னர்களுள் ஓர்வீரனின் சரித்திரம் இதனை நாங்கள் பக்தியுடன் தினமும் பாராயணம்செய்வது வழக்கம் என பதிலளித்தார். அதுகேட்ட மன்னன் அவரைத் தன் ஆஸ்தானத்திற்கழைத்துச் சென்று, உபசரித்துத் தானும் ஓர் பெரிய நிகரற்ற வீரனாகையால் தன் சரித்திரத்தையும் எழுதி முடிக்கவேணும் இனி அதையே எல்லோரும் பாராயணம் செய்யவேணுமென்று கட்டளையிட்டான். அதற்கு அப்பண்டி

தன் 'ஐயா, இதற்கு சுமார் ஆறு மாதம் பிடிக்கும். பல பண்டிதர்களை வரவழைக்கவேணும். பலபிரதிகள் எழுதிபிரசாரம் செய்ய வேண்டி ஓலைச்சுருள்கள் தயார் செய்யவேணும். இந்நூல்கள் எழுத ஆரம்பிக்கும் முன் எங்கள் குல தெய்வங்களுக்கு ஸமாராதனைகள் செய்யவேண்டும்' என்றும் அறிவித்தார். அரசன்வேண்டிய பொருளுதவி செய்யும்படி பொக்கிஷதாரருக்கு உத்திரவு அளித்துவிட்டார்.

பிறகு அப்பண்டிதர் பல நூற்றுக்கணக்கான பண்டிதர்களை வரவழைத்து, தினமும் பல்லாயிரக்கணக்கான ஜனங்களுக்கு அறுசுவையுடன் அன்னமிட்டுக்கொண்டும் வந்தார். பல்லாயிரக் கணக்கான ஓலைச்சுருள்களை சேர்த்தும் வைத்தார். வந்திருந்தவர்களெல்லோரும் இம்மஹம்மதிய மன்னர் எக்காரணம்பற்றி இவ்வாறு சிலவு செய்கிறாரென்று பிரமித்தனர்.

குறிப்பிட்டகாலம் நெருங்கவே, அரசன் பண்டிதரை அழைப்பித்து வினவ, அப்பண்டிதரும் மிக்க வணக்கத்துடன் அவரை அழைத்துச் சென்று, ஏராளமாய் பண்டிதர்கள் குவிந்திருப்பதையும் ஓலைச்சுருள்கள் நிறைத்து வைத்திருப்பதையும் காட்டினார். அரசன் மிக்க மனச்சந்தோஷத்துடன் 'இன்னும் இரண்டு தினங்களில் முடிந்துவிடுமா' எனக்கேட்டான்.

அப்பொழுது புத்திவன்மைவாய்ந்த அம்மறையோன் 'ஐயா யாங்கள் அனேகமாய் முடித்துவிட்டோம். ஆனாலும் சிறிது பாகம் மட்டில் பாக்கியிருக்கின்றது. அதனைத் தங்களை ஓர் விஷயம் கேட்டுக்கொண்டு முடிக்கவேணுமென்றார். அரசன் அது யாது என்று மிக்க ஆவலுடன் வினவ, அவ்வந்தணர் 'ஐயா! இராமாயணம் முக்கியமாய் இராமன் மனைவியை ஓர் அரசன் தூக்கிச்சென்றதாகவும் அவனைக்கொன்று திரும்ப தன் மனைவியை அடைந்ததாகவும் கூறுகிறது. அதுபோல் தங்கள் விஷயத்தில் ஒன்றும் நிகழ்ந்ததாக நாங்கள் காதால் கூடகேட்டறியோம். அவ்வாறு ஏதாவது உண்டா' எனவினவினர்.

அதுகேட்ட அரசன் வெறுப்புற்று 'சீ! தூ!!' என் மனையாளை தெய்வங்கூட காண்பதரிது. அப்படியானால் ஒன்றுமே வேண்டாம். ஓலைச்சுருள்களை எல்லாம் எரித்துவிடுங்கள்' என உத்திரவிட்டான்.

இதுதான் சமயமென்று பல பண்டிதர்களும் தங்களுக்கு வேண்டிய கிரந்தங்கள் எழுத சௌக்கியமாயிற்றென்ற மனக்களிப்புடன் தங்களாலியன்றமட்டும் ஓலைக்கட்டுகளைக்கொண்டு சென்றனர். அப்பண்டிதரின் புத்திவன்மையைப் பலரும் மெச்சினர். இம்மாதிரி பல நிகழ்ந்த செய்திகள் உள. எழுத விரியும். மகம்மதியர்கள் கையிலகப்பட்டு நம் முன்னோர்கள் பட்ட கஷ்டத்தை 'இது ஹைதர் காலமல்ல' என்று சாதாரணமாக ஜனங்கள் அடிக்கடி கூறுவதே நன்கு வெளியிடுகிறது.

இன்று நம் நாட்டில் காணப்படும் மஹம்மதியர்கள் எல்லாம் முன்பு மஹம்மதியர்களிடம் பயந்து வேஷம்பூண்ட மஹம்மதியர் குலத்துதித்தவர்களே! உதாரணமாக மதுரைஜில்லா போதினுயக்கனூர் கலாசாலைத் தமிழாசிரியரும் எனது நண்பருமாகிய மஹம்மது ஹூஸைன்கான் என்பவர் "தாங்கள் தமிழ்மக்கள் 'வைகைக் கரையார்' என்ற பட்டம் பெற்றவர்கள்" என்று தம் முன்னோர்களின் சரித்திரத்தை ஆராய்ந்து கூறுகிறார்.

இவ்வாறு மததர்மங்கள் சீரகேடான நிலைமையையடைந்து ஆர்யர்கள் தத்தளிக்கையில் ஸ்ரீசிவாஜிமஹாராஜா அவர்களைப் பாதுகார்ப்பதையே முக்கியமாகக்கொண்டு மஹம்மதியர்களை வேரோடு களைந்து குமரிமுதல் பனிவரைவரைக்கும் மஹாராஷ்டிர ராஜாங்கமாகச் செய்தார். மஹம்மதியர்களையழிப்பதே இவருடைய முக்கியச்செய்கையாம். இதனை திருவிசநல்லூரில் ஸித்த புருஷாக விளங்கின *அய்யாவாள் என்னும் ஸ்ரீதரவேங்கடேசர் தன்னுடைய கிரந்தத்தில்

शिवाजि राजोऽथविभुर्यशस्वी प्रागल्भ्यमत्युन्नतमालम्बे ।
चण्डैभुजादण्डमहःप्रकाण्डैः विखण्डयन् यावनमण्डलानि ॥

'எல்லாம் வல்லவரும் கீர்த்தி வாய்ந்தவருமான ஸ்ரீசிவாஜிமஹாராஜா மிக்க பலம்வாய்ந்த தன் புஜபராக்கிரமத்தால் மஹம்மதியர்களின் கூட்டத்தையழித்து மிக்க மேன்மை பெற்றார்" எனவும்; கவீந்தரபரமானந்தர் என்னும் ஓர் காசிவாஸியான அந்தணர் கடவுளினுணைப்படிதான் எழுதிய சிவபாரதம் என்னும் கிரந்தத்தில்

* ஆர்யதர்மம் புத்தகம் 9 பக்கம் 733-ல் 'ஸ்ரீசங்கரகுருபரம்பரை' என்றதலையங்கத்தின்கீழ் ஸ்ரீதரவேங்கடேசரின்சரித்திரத்தைக்காணலாம்.

श्रीभगवानुवाच—

चैद्यकेशिमुखाश्चान्ये दनोः पुत्रास्सहस्रशः ।
रोध्दारस्सर्वधर्माणां अधर्माध्वप्रवर्तकाः ॥
मयैवनिहताः पूर्वमवतार्य तदातदा ।
इदानीमपिदैत्यानां वधाययवनात्मनाम् ॥
वसुधामवतीर्णोऽस्मितनुमादायमानुषीम् ॥

'முற்காலத்தில் தர்மங்களைக் கெடுப்பவர்களும் அதர்மவழிகளைப் பின்பற்றி நடக்கச்செய்வோர்களுமான சைத்யன்கேசி முதலிய தனுவின் புத்திரர்கள் ஆயிரக்கணக்காக என்னாலே கொல்லப்பட்டனர். இப்பொழுதும மஹம்மதியர் என்ற வடிவங்கொண்ட அவ்வசுரர்களையழிப்பதற்கே மனிதவுருவுடன் இப்புவியில் தோன்றியிருக்கிறேன்' என்று பகவான் தனக்கு ஸமாதிநிலையிலிருக்குங்கால் உபதேசித்ததாகக் கூறுகிறார்.

இந்த சிவாஜிமஹாராஜாவை பலரும் பகவானின் அம்சாவதாரமாகவே கருதினரென்று பல கிரந்தங்களிலிருந்தும் வெளியாகிறது.

உதாரணமாக ரஸிகாஞ்சனிமுதலியகிரந்தங்களியற்றியவரும்

गङ्गापायीजन्हुः सागरपायीच कुम्भसंभूनः ।
गङ्गासागरपायी गङ्गाधरवाजपेययाजीन्द्रः ॥

என்று பலராலும் போற்றப்படும் கங்காதரவாஜபேயி என்னும் ஓர் பெரியார் தானியற்றியுள்ளதோர் நூலில்

शिवाख्यमेशाश्शिवएवासाक्षादहीनसत्वाभरणोऽव्यराजन् ।
अस्यस्मिन्नेह्यभवन्नराणां नामावशेषाः नगरीविशेषाः ॥

'குறைவற்ற பலம்வாய்ந்த சிவாஜிமஹாராஜா ஸாக்ஷாத் சிவனுருவே. இவன் சிரித்தமாத்திரத்தில் சத்துருக்களின் பட்டினங்கள் பெயரைமாத்திரமே மீதமுடையதாயிற்று' என்று வரைந்துள்ளார். மயூரபண்டிதர் (மோரோபந்த்) என்னுமோர் மஹாராஷ்டிர ஸாது,

मान्य शिवाजिराज नह्मणो मी यासि साधु कथ निका ।
तन्महिमा नतसुजना न कले मूढा जनासि आधुनिका ॥

எல்லோராலும் மதிக்கப்பெற்ற சிவாஜிஎன்பவரை நான் சாதாரண அரசனென்றுமாத்திரம் கூறவில்லை. இவரைவிட ஸாதுக்கள் மேலானவர்களா என்ன? ஸாதுஜனங்களால் வணங்கப்படும் பெரியோர்களே இவர் மஹிமையையறிவர். இக்காலத்திய மூடஜனங்கள் அறியவே அறியார் என்றும் சிறப்பித்துக் கூறியுள்ளார்கள்.

ஆர்யதர்மத்தைப் பாலனம் செய்வதில் ஊக்கமுடைய கர்நடகராஜ்யத்தின் தலைநகராகிய விஜயநகரமழியவே மகம்மதியர்கள் சூழ்ச்சியால் துன்புற்ற நம் காஞ்சி காமகோடி மடத்தை ¶ காஞ்சியில்நின்றும் கும்பகோணத்திற்கு மாற்றி இம்மடத்தைக்கண்ணுங் கருத்துமாய் ஆதரித்துவந்தவர்கள் இச்சத்திரபதியின் வமசத்தவர்களான தஞ்சையாண்ட மஹாராஷ்டிரமன்னர்களே.

ஆனதுபற்றி இவ்வாரியதர்மத்தைத் தலைகாற்ற இச்சிவாஜி மஹாராஜாவை நாம் என்றும் நினைக்கவேண்டும். இவர் மீமாம்ஸாசாஸ்திரத்தில் நிபுணரான காகாபட்டர், ஜயராமகவி முதலிய பல பண்டிதர்களையும் கவிகளையும் ஆதரித்துவந்தார். இம்மன்னனின் வீரச்செய்கைகளையும் ஆர்யதர்மத்திலிருந்த ஊக்கத்தையும் பண்டிதர்களிடம் ஆதரவையும் வெளியிடக்கூடிய அறிய பெரிய பல விஷயங்கள் ஆங்காங்கு வடமொழிநூல்களுள பொதிந்து கிடக்கின்றன.

ஆதலால் பண்டிதர்களும் மற்ற அறிஞர்களும் நன்கு ஆராய்ச்சிசெய்து ஸ்ரீ சத்திரபதிசிவாஜியின் சரித்திரசம்பந்தமான நிகழ்ச்சிகளை தங்கள் தங்களுக்குக் கிடைக்குமாதாரங்களைக்கொண்டு வியாஸரூபமாக வெளியிடவேண்டுமென்று வேண்டுகிறேன்.

இவ்வாறான சரித்திர ஆராய்ச்சி உயிரைக்கொடுத்தேனும் தம் மதத்தைக் காப்பாற்றவேண்டுமென்ற ஊக்கத்தையும் மன உற்சாகத்தையும் அளிக்குமென்பதற்கையமில்லை. சுபம்.

பண்டித நீ. வைத்யநாதசாஸ்திரி.

---

¶ சென்னைமாகாணம் கல்வெட்டுகள் Vol. II, தஞ்சைஜில்லா No. 62 C. கவனிக்கவும்.

# சாஸ்திரி நேரு சம்வாதம்.

சமீபத்தில் காசியிலிருக்கும் ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய பிர்மஸ்ரீ திராவிட லக்ஷ்மணசாஸ்திரிகள், பிர்மஸ்ரீ ராஜேசுவாசாஸ்திரிகள், ஸ்ரீமான் சங்காணிமகோதயர், ஸ்ரீமான் தேவநாயகாசார்யர் முதலியவர்களுக்கு ஸ்ரீமான் மோதிலால்நேரு அவர்களுடன் சம்பாஷணை ஏற்பட்டதாய் ஷை விஷயத்தை பிராமணமஹாஸம்மேளன பத்திரிகையில் பிரசுரம் செய்திருப்பதை இங்கு ஆஸ்திகர்கள் அறியும்பொருட்டு வரைகிறேன்.

ஸ்ரீலக்ஷ்மணசாஸ்திரிகள்:—பெரியோர்களே! தாங்கள்தான் தேசஸேவைசெய்வதில் முந்தினவர்களென்றுகொண்டு கேட்கிறேன். இந்த காங்கிரஸ் மகாஸபை என்பது எவர்களுடையது?

மோதிலால்நேருமகோதயர்:— இந்தியாவிலுள்ள எல்லா ஜனங்களுடையது.

ல:— இந்தியாவிலுள்ளவர்களென்றால் ஜைனர்கள், பாஸீகர்கள், சிக்கியர்கள், கிறிஸ்தவர்கள், யவனர்கள், ஸநாதனதர்மிகள், ஆர்யஸமாஜத்தவர்கள் முதலிய பலர் இருக்கின்றனரே. இச்சபை அவர்கள் யாவருடையதுமா?

நேரு:— ஆம்.

ல:— அவ்விதமாயின் அம்மகாஸபையில் ஸநாதனதர்மிகள் பிரவேசியாமலிருக்கும்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிற நியமங்கள் தங்களுக்கும் இஷ்டம்தானே?

நேரு:— ஸநாதனதர்மிகள் உள்ளே வாராமலிருக்கும்படி அவ்வித வரம்பு என்ன இருக்கின்றது?

ல:— தொடத்தகாதவர்களைத் தொடுதல், சாப்பிடக்கூடாதவைகளைச் சாப்பிடுதல் முதலியவைகள் ஸநாதனதர்மத்திற்கு விரோதம் தர்மவிரோதமான நியமங்கள்தான் ஸநாதனதர்மிகளை விரட்டுவதற்குக் காரணங்கள்.

நேரு:— இந்த விஷயத்தை தாங்கள் மகாத்மாகாந்தியினிடம் சென்று யோஜிப்பீர்களானால் அப்போது நான் மிகவும் அனுக்கிரஹிக்கப்பட்டவனாவேன்.

பண்டித ராஜாராஜேசுவரசாஸ்திரிகள்:— ஆ என்ன! நாங்கள் காந்தியினிடம் போய் தர்மவிஷயமான கேழ்வியைக்கேட்கவேண்டுமோ? அவர் எப்போது கோஹத்திக்குச்சரியான மகாபாதகத்தை அறிந்து செய்தாரோ அப்போதே பாரதவர்ஷீயர்களது தர்மத்தைவிட்டு வழுவிவிட்டதால் எங்களால் ஸர்வகர்மத்தையும் விட்டவரென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றனர். அவ்வித கடுமையான கன்மம் தங்களிடமில்லையென்றுகொண்டு தங்களை விசாரிக்கிறோம். தாங்கள்தான் எமது கேழ்விக்கு உத்தரம் கொடுக்க வேண்டும்.

(பிறகு நேருவும் அவருடன்கூட இருந்தவர்களும் இச்சத்தியவசனத்தைக்கேட்டு பிரமித்து தலையை அசைத்துக்கொண்டு ஒருவருக்கொருவர்முகத்தைப்பார்த்துக்கொண்டு சற்றுமௌனம் சாதித்தனர்.) பிறகு

நேரு:— இல்லை அநேகர்களது ஸம்மதத்தின்பேரில் தான் தொடாதவர்களைத் தொடுதலென்ற பிரஸ்தாவம் ஸ்வீகரிக்கப்பட்டிருக்கிறது. எந்த ஸபையோருக்கு எந்த விஷயத்தில் அநேகர் ஸம்மதம்ஏற்படுமோ அதைத்தான் மகாஸபையில்கட்டாயப்படுத்த வேண்டுமென்று வரம்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே தாங்களும் இச்சபையில் அநேகர்களது ஸம்மதத்தின்பேரில் சிற்சில விஷயங்களைக்கொண்டுவருவீர்களானால் அப்போது ஆனந்தமாய் அங்கீகரிப்பார்கள்.

ல:— ஐயா! அநேகர்களது ஸம்மதம்தான் இச்சபை எவ்விதத்திலும் முக்கியமான காரியம் ஸித்திக்காது. எச்சாதியோரை சார்ந்தவர்கள் பலமாய் நின்றுகொண்டுஇதில்பிரவேசிப்பார்களோ அவர்கள் முதலில் ஏற்பட்டிருந்த நியமங்களை பிளந்தெறிந்து விட்டு தங்களது இஷ்டத்தைப் பூர்த்திசெய்துகொண்டு இஷ்டப்படி நியமங்களை மாற்றிக்கொண்டே இருப்பார்கள். இவ்விதமாக ஸபைக்கு ஸ்திரமான ரூல்ஒன்றென்றில்லாமல் தந்தலையாட்டமாய் இருந்துகொண்டு இச்சபைஎவ்விதம் லோகஹிதம் செய்யும்? இவ்விதம் வியவஸ்தைகெட்டதா இது? இதில் பொதுவாய் இருக்கும்படி நியமங்களை ஏற்படுத்துபவர்களுமில்லையா?

(பிறகு இவ்விதம் ஆழ்ந்த கருத்தடங்கிய கேழ்விக்குத் தக்கபடி பதிலளிக்கமுடியாமல் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்

துக்கொண்டிருந்தனர். அப்போது அவர்கள் உட்கார்ந்திருந்தது பார்க்கத்தக்கதாய் அவ்வளவு அழகாய் இருந்தது.) மறுபடி

ல:— தொடாதவர்களைத் தொடுவதால் இம்மகாஸபைக்கு என்ன லாபமேற்படுகிறது ?

நேரு:— தொடத்தகாதவர்களென்ற ஜாதியோர் இந்துக்களிடமிருந்து சரியான ஆதரவை அடையாதவர்களாய் மஹம்மதியமதத்திலும் கிறிஸ்தவமதத்திலும்பிரவேசிக்கிறார்கள். ஆகவே அவர்கள் வேறு மதத்தில் நுழையாமலிருப்பதற்காகவே அவர்களுடன் ஆகாரம் முதலிய பழக்கங்களைச் செய்துகொள்ளவேண்டுமென்று வியவஸ்தை செய்யப்பட்டிருக்கிறது.

ல:— அவர்கள் மகம்மதியர்களாகவோ கிறிஸ்தவர்களாகவோ போகட்டுமே. அதனால் காங்கிரஸ் மஹாஸபைக்கு என்ன கெடுதல்? இச்சபை இந்துக்களுக்குமட்டும் சொந்தமல்லவே. மகமதியர்கள்போல் மற்ற ஜாதியாருந்தானே இச்சபையில் சேர்ந்திருக்கின்றனர். இப்படியிருக்க இவ்வித பக்ஷபாதத்திற்கு உண்மையான உன் அபிப்பிராயம் யாது? இந்தியாவிலுள்ள ஸமஸ்த மதத்தினருக்கும் பொதுவான மஹாஸபைக்கு ஒரு சாதியாரிடத்தில் பக்ஷபாதத்திற்குக் காரணம் யாது?

(இனி யாது கூறுவது? இக்கேழ்வியால் யாவருமே மயங்கிவிட்டனர், முகத்தையும் தொங்கவிட்டனர், நன்றாய்ப் பேசுபவரென்ற க்யாதியையும் அழித்தது, ஒன்றும் பேசவில்லை. சித்திரத்தில் பிரதிபிம்பம்போல் அசையாமல் ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சற்றுநேரம் சென்று சிரமப்பட்டு பிரக்ஞை அடைந்தவர்கள்போலானார்கள்.) பிறகு

நேரு:— இருக்கட்டும், பொருங்கள், பலபலகார்யத்தால் இழுக்கப்பட்டு இன்னமும் ஆகாரம் செய்யவில்லை, சாப்பிடச் சொல்லலாமென்று நினைக்கிறேன்.

ஸ்ரீ சங்கபாணிமகோதயர்:— தாங்கள் எங்களது கேழ்விகள் ஒன்றுக்கும் பதிலளியாது மௌனத்தையே சரணமடைந்துவிட்டீர்கள். தயவுசெய்து கொஞ்சநேரம் இருந்து இதற்கு பதிற் கூறுங்கள். தாங்கள்தான் இம்மகாஸபைக்கு ஸபாபதியாய் நடத்திக்கொண்டு வியாதியால் உடம்பு அசௌகர்யத்தை அடைந்திருந்தும் சாரதாமசோதா ஸபையில் நடக்கும்போது தான் வாமுடி-

யாததால் ஒவ்வொரு சபை மெம்பர்களுக்கும் தந்தி கொடுத்து அம்மசோதாவை ஆதரிக்கச்சொன்னீர்களே? ஆகவே காங்கிரஸ் ஸபைமூலமாய் ஸனுதனதாமத்தில் கோடறிபோடவில்லையா? இப்படிச் செய்துவிட்டு காங்கிரஸ்மூலமாய் தர்மவிஷயத்தில் கெடுதல் ஏற்படாதென்று எவ்விதம் சொல்லமுடியும்?

நேரு:— இல்லை. அது என்னுல் என் அபிப்பிராயத்தை அனுஸரித்துச் செய்யப்பட்டது.

ச. ம:— இருக்கட்டும். எப்படி தங்களால் அந்த கார்யம் தங்களுடைய அபிப்பிராயத்தாற்செய்யப்பட்டதென்று சொல்லப்படுகிறதோ, அப்படியே சட்டம் வியவஸ்தைசெய்யுமஸபையிலும் தன்னுள் ஏற்பட்ட அதிகாரத்தாலேயே சம்மதம்கொடுக்கப்பட்டதென்றும் சொல்லப்படும்.

ஆனுல் இங்கு கேட்கப்படவேண்டியது இது. தாங்கள் சட்டஸபையில் ஸமஸ்தஜனக்கூட்டத்தாலும் தங்களுக்குப் பிரதிநிதி என்றல்லவோ நியமிக்கப்பட்டீர்கள். அதனுலல்லவா சட்டஸபையில் உங்களுக்குப் பிரதிஷ்டையும் கிடைத்திருக்கிறது. அப்படி இருக்க கார்யாந்தரத்தில் நியமிக்கப்பட்ட உங்களுக்கு உங்களிஷ்டப்படி நடக்க இந்த அதிகாரம் ஏது? திடீரென சட்டசபையில் நுழைந்து ஜனக்கூட்டத்திற்கு முழுமையும் நாசத்தைச் செய்யக்கூடிய விருத்தமான இச்சம்மதி கொடுக்கப்பட்டதே. உங்களுக்கு நன்மையையே செய்கிறேனென்று ஜனங்களிடமிருந்தும் அதிகாரத்தை ஸ்வீகரித்து மிகவும் அதற்கு விரோதமாய் இஷ்டப்படி விளையாடின தங்களால் நம்பிக்கை மோசம் செய்யப்படவில்லையா?

(இதைக் கேட்டுவிட்டு நேரு நட்டமாய் நின்று பட்டுப்போன மரம்போலானுர். இன்னது சொல்வதென்று தோன்றுமல் வியர்வையால் விருவிருத்து கலங்கினுர்.) பிறகு

நேரு:— எப்படி இஷ்டமோ அப்படி வைத்துக்கொள்ளுங்கள், இப்போது நான் சாப்பிடப்போகிறேன், தாங்கள் பொருத்துக்கொள்ளுங்கள், இங்கு என் அபிப்பிராயத்தையும் தெரியப்படுத்த விரும்புகிறேன். என்னவெனில்— என் சம்பந்தப்பட்டமட்டில் நான் ஹிந்துவல்ல, மகமதியனல்ல, கிறிஸ்தவனல்ல, என்

னுடையதென்று ஒரு தர்மவிசேஷமும் கிடையாது. நான் தேச ஸேவை ஒன்றைத்தான் தர்மமாய் எண்ணிக்கொண்டு சக்தியுள்ள மட்டும் அதன்விஷயமான கார்யத்தையே செய்கிறேன்.

தேவ:—உங்களது தேசஸேவையைச் சொல்லவேண்டுமா? பாடவும் வேண்டும். ஆனால் எங்களது சங்கைகள் ஒன்றுக்கும் ஸமாதானம் காணோம். இனிமேல் சட்டசபைமூலம் தர்மவிஷயமாய் ஒரு பேச்சும் வாராதென்று கூறுகிறீர்கள் இனி சட்டசபை ராஜநீதி வியவஸ்தை மூலமாய் எல்லா ஜனங்களுக்கும் ஹிதமாய் ராஜ்யகார்யம் நடக்குமேயானால் அப்போது நாங்களும் கூட ஸம்மதி ஏற்றுக்கொள்வோம்.

நேரு:— இந்த சமயம் மன்னிக்கவேண்டும். சாப்பிடப்போகின்றேன் இனிமேல் சட்டசபைதர்மவிஷயத்தில் கைபோடமாட்டாதென்பதை மட்டிலும் நிச்சயமாய் நம்புங்கள்.

தேவ:— ஆனால் இனி தொடத் தகாதவர்களைத் தொடுதல் என்ற விஷயம் உங்கள் ஸபையினின்று ஏற்பட்டுவிடுமா?

நேரு:— தொடத்தகாதவர்களைத் தொடுதலென்பதை நான் அதர்மமாய் எண்ணவில்லை.

தேவ:—தாங்கள் எண்ணுவதற்கும் எண்ணாததற்கும் விசேஷம் என்ன தங்களுக்கோ தர்மவிசேஷம் கிடையாது. அப்படிப்பட்ட உங்களுக்கு தர்மமாய் எண்ணாதது ஸ்வபாவம் தான்.

நேரு:— ஸநாதன தர்மத்தை அனுஸரித்த மாளவியா அவர்களும் இவ்விஷயத்தை ஏற்கிறார்களே!

தேவ:— ஐயா! தர்மவியவஸ்தை விஷயத்தில் சிலாது ஸம்மதியாவது சிலாது ஆக்ஷேபமாவது பிரமாணமாகாது. அது அந்தந்த ஜாதியைக் கட்டுப்படுத்துகிற சாஸ்திரங்களை அனுஸரித்துத்தான் பிரமாணமாகும். எவ்விதமெனில் இந்து ஜாதி தர்மத்திற்குப் பிரமாணம் வேதங்கள், மகம்மதியர்களுக்கு குரான். கிருஸ்துவர்களுக்குப் பைபிள் என்று அந்தந்த தர்மகிரந்தங்களை ஏற்று அந்தந்த மததர்மங்கள் ஏற்கப்படுகிறது. அப்படி ஆகும்போது ஸநாதனதர்மத்தின் ஸ்வரூபத்தை சுருதிஸ்மிருதி முதலிய சாஸ்திரங்களின் மூலமாய்த்தான் நிச்சயிக்கமுடியும். அங்கு தொடத்தகாதவர்களைத் தொடுதல் முதலியனவரையறுக்கப்பட்டிருக்கின்றன.

பிறகு தன் ஸாமர்த்தியத்திற்கு மேற்போன வசனங்களைக் கேட்டு மோதிலால் நேரு அவர்கள் அவர்களிடத்தில்மன்னிப்புக் கேட்டுக்கொண்டு புறப்பட்டு கேள்விகளுக்குப் பதில் எது? அப்போது தன்னை விடுவித்துக்கொள்வதே பெரும் பிரயத்னமாய் விட்டது. இவ்விதம் கீழ்க்கூறிய விஷயங்களுக்கு நாளது வரை யாரும் சரியான பதிலளிக்கவில்லை. ஆனால் இப்படிப்பட்ட வியவஸ்தையற்ற கலங்கினமனதோடு தேசஸேவை என்ற டம்பத்தை பிரகடனம் செய்கிற்வர்கள் ஜனங்களை வஞ்சிக்கிறார்கள் என்ற ஆச்சரியத்தை ஜனங்களின் முன்னிலையில்பிரகடனம்செய்கிறோம்.

தொடத்தகாதவர்களை தூக்கிவிடுதல் என்று கீழ்க்காட்டிய வியவஸ்தா விஷயமான கேழ்விகளால் கட்டப்பட்ட மோதிலால் நேரு அவர்களின் ஒட்டாத பதில்களால் பத்திரிகையைப் படிக்கின்ற பிரியபந்துக்கள் தாங்களே இதை அறிந்துகொள்ளச் சக்தி உள்ளவர்கள் தான். என்னவெனில் இந்த பரிஷ்காரர்கள் தேசாந்தரத்தவர்களது வேஷம் பாஷை நடை உடை பாவனை முதலிய அனுசாரத்தைப் பிரசாரம் செய்வது மூலம் இந்தியர்களை ஐரோப்பியதர்மத்தை அடையும்படி செய்யவே முயற்சிக்கிறார்கள். ஸ்வராஜ்யம் அடைவதென்ற விஷயத்தில் இஷ்டப்படி இருக்கட்டும். ஆனால் இவர்களை அன்னியாயமான தேசாந்தராசாரத்தைப் பரப்புகிறார்களே. இதனால் இது வெளியாகிறது. இந்த பரிஷ்காரக்காரர்கள் இந்தியாவைத் தன் ஊழியர்களென்ற கூட்டிலடைக்க விரும்புகிற கிருஸ்தவர்களுக்கு மறைவான வேலைக்காரர்களோ என்று தோன்றுகிறது. இவர்களிடமிருந்து ஸாவதானமாய் நம் கார்யத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும். தர்மத்தை நிலைநாட்ட வேண்டுமென்று இந்துக்களோ மகம்மதியர்களோ தேசஸேவையில் நுழைவார்களானால் அப்போது தான் க்ஷேமம் ஏற்படும். தர்மவீரர்களான புருஷர்கள் தான் நம் தாய் நாடான இப்பாரதநாட்டை தேசாந்தரத்தவர்களது பந்தகத்திலிருந்துவிடுவிக்க சமர்த்தர்களாவார்கள். தேசாந்தரத்தவர்களது வேஷபாஷையினால் மயங்கின பூர்ணகல்யாணகாரணமான ஸ்வதர்மத்தையே அனுஷ்டிக்கச்சக்தியற்று அதைப் பரிபாலிக்கவும் சக்தியற்ற எந்தப் பாமரர்களோ அவர்கள் எவ்விதம் தேசத்திற்குக் கல்யாணத்தைச் செய்ய சக்தியுள்ளவர்களாவார்கள்.

M. N. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

# கடன் கூடாது.

(ஓர் இதிஹாசம்)

இடம் சாம்யகாவனம் காலம், (பீஷ்மரிடம் மற்றுமுள்ள முனிவர்கள் தர்மபுத்திரர் முதலான பாண்டவர்கள், திரௌபதி, மற்ற ருஷிபத்னிகள் கூடி தர்மத்தைக் கேட்குங்காலம்,

தர்மபுத்திரர்:— தாதா ? மனிதர் எதனுல் நரகத்தை அடைகின்றனர்? யாருடைய சேர்க்கையால் சுவர்க்கத்தை அடைகின்றனர் ? கடன்கொடுக்கிறவர்கள் வாங்குகிறவர்கள் இவர்களுடைய கதி என்ன ?

பீஷ்மர்:— குழந்தாய் ! இதற்கு ஒரு ஆச்சர்யமான பழைய கதையை சொல்லுகிறேன். அதனுல் நீ கேட்டவைகளுக்கு பதில் ஏற்படும். அதைக்கேள்.

தர்ம:— அப்படிபட்ட கதையைக் கேழ்க்க மிகவும் ஆசைப் படுகிறேன்.

பீஷ்:— புண்யபூமியாயும், எல்லாசம்பத்து நிறைந்த காச்மீர மென்றொரு தேசமுண்டு. அங்கு பத்ரகன் என்று எல்லா ஆசாரத்தையும் விட்ட ஓர் பிராமணனிருந்தான். அவன் பயிரிடுவதால் கஷ்டப்பட்டும், எப்பொழுதும் வேதவிரோதமான காரியங்களைச் செய்துகொண்டும், தாய், தகப்பன் குலத்தாரால் கைவிடப்பட்டும் சூத்திர நடைத்தைகளில் ஆசையுள்ளவனும் இருந்தபடியால் அந்த தேசத்து ராஜதண்டனைக்குப் பயந்து வேறு தேசத்திற்கு ஓடிப்போய்விட்டான்.

தர்ம:— அங்கு போய் என்ன செய்தான் ?

பீஷ்:— பலகாலம் அங்குவசித்து தன் துர்புத்தியால் ஓர் காரிக்காளையையும் ஓர் எருமைக்கிடாவையும் திருடினன். அவை இரண்டையும் அன்றிரவே ஓட்டிக்கொண்டு தன் ஊர் வந்து அடைந்தான்.

(தொடரும்.)

வி. உமாமகேசுவரசாஸ்திரிகள்.